ALPHA MIND POWER

# NEWSLETTER



June 2016

## *From Guruji's desk….*

My dear Alpha Siddha,

Summers greetings to you!

By the time this newsletter reaches you, the worst of summer will be over. We have even received a lot of rain to cool the Earth. Now we can settle down for cooler weather with its own changing experience.

A few weeks back I was marveling at the way the mind perceives a situation in life. And how that perception can change the entire experience for a person. That is how powerful the mind is!

One lady came for counseling. She was married for one year. It was very clear that she was absolutely unhappy with her marriage. What was the problem? She explained 'My mother in law does not bother at all about anything in the house. The day I came to their house as daughter in law, she entrusted me with everything and started travelling to Australia and England to visit her daughter and other son who are there. She hardly stays with us. She expects me to manage everything in their huge house. I am also working.

My husband is very busy. I am feeling totally smothered by so much responsibility. I want to be carefree as I was before marriage. Now I have too many things to take care of and I don't like it. I am very unhappy. When I try telling my husband, he just does not want to listen to me. He says, it is our house. Do whatever you feel is right. I am feeling lonely. How do I manage this situation?'

I gave her some therapy and other techniques to make herself powerful enough to manage the house and her work as well easily.

Immediately after her came another lady. She was also working. She was married for about six months. She was also unhappy! Reason? She explained 'Before marriage I lived in a joint family. I have always wanted to have my own house and manage it the way I want. But after marriage my in laws are with us. They take care of everything. My mother in law does all the cooking. In fact, after I go to office, she even visits our room and cleans it up.



I feel absolutely outraged. Why should she do everything? Then what is there for me to do in this house? When I asked my husband, he said his parents are very caring and they do not want us to worry about anything. So I should just leave it like that. But when will I have the freedom to have my own way in my house?'

I gave this lady some guidance on how to gently let her mother in law know that she would also like to participate in managing the house. I also made her understand that she was actually very lucky and that whatever changes she wanted should be implemented without upsetting her mother in law's feelings. I also tried to imbibe a feeling of gratitude in her for the very comfortable life that she had.

I found myself marveling at the two different ladies with two different situations quite opposite to each other and both of them being unhappy!

Ideally, they should have been in each other's place. Then everything would have been smooth. But again, I was not sure about that. With the second lady life was perfect. But she was also very unhappy!! It is not the situation, it is how we look at it, how we perceive it, how we experience it which makes the difference.

Is it possible to change the experience of a situation by changing our thought patterns? Yes, certainly. If you feel some situation is making you unhappy in life, first of all meditate and see whether there can be a different way of looking at that situation. Is there something you can be happy about? And if you can change the perception, believe me, the whole situation takes on a different color. The mind is very powerful. Make it work to make your life better.

Blessings,

***Srimatha***

**Alpha Music Therapy!**

Alpha Music Therapy is a wonderful treatment for the mind introduced by our Guruji! Hundreds have already benefitted by this therapy. This is a treatment which creates the change that one wants in his mind. Many have been able to get rid of negative thoughts completely. Suicide tendencies have disappeared! Children have been able to study very well after this treatment! Alcoholics have totally given up alcohol! All this with just Alpha Music Therapy!

You may contact AMP office for details and appointment.

என் அன்பிற்குரிய ஆல்ஃபா சித்தரே,

வாழ்த்துக்களுடன் எழுதுகிறேன்.

இந்த கடிதம் உங்கள் கையில் கிடைக்கும் நேரம் வெயிலின் உச்சம் தணிந்திருக்கும். மண்ணை குளிர வைக்கும் அளவுக்கு மழையும் பெய்திருக்கிறது. இனி சற்று மென்மையான சூழலை எதிர்ப்பார்க்கலாம்.

சில வாரங்களுக்கு முன் மனம் எப்படியெல்லாம் செயல்படுகிறது என வியந்தேன். மனம் ஒரு சூழ்நிலையை பார்க்கும் கண்ணோட்டத்தை பொறுத்து அதன் அனுபவமே மாறி விடுவதை நினைத்துப் பார்த்தேன். மனம் எவ்வளவு வலிமையானது?

ஒரு பெண் என்னை சந்திக்க வந்திருந்தார். திருமணமாகி ஒரு வருடம் ஆகியிருந்தது. அந்த திருமணத்தில் அவர் மகிழ்ச்சியாக இல்லை என்பது அவர் முகத்தைப் பார்த்தே புரிந்து கொள்ள முடிந்தது. பிரச்சினை என்ன? அவர் சொன்னார் 'எனது மாமியார் எங்கள் வீட்டில் எதைப் பற்றியுமே கவலைப்படுவதில்லை. நான் இந்த வீட்டிற்கு மருமகளாக வந்த அன்றே எல்லா பொறுப்பையும் என்னிடம் ஒப்படைத்து விட்டார். அவர் ஆஸ்திரேலியா லண்டன் என்று அவரது மகள் மற்றும் இன்னொரு மகன் இருக்கும் இடங்களுக்கு சென்று விடுகிறார். எங்களுடன் இருப்பதே இல்லை. அவர்களது பெரிய வீட்டை நான் பராமரிக்க வேண்டும் என்று எதிர்ப்பார்க்கிறார். நான் வேலைக்கும் செல்கிறேன்.

என் கணவரும் மிகவும் பிஸியாக இருக்கிறார். இத்தனை பொறுப்புகளால் எனக்கு மூச்சு முட்டுவது போல் இருக்கிறது. திருமணத்திற்கு முன் இருந்தது போல் சுதந்திரமாக இருக்க விரும்புகிறேன். இப்பொழுது எனக்கு மிக அதிகமான பொறுப்புகள் இருப்பதால் நிம்மதி இல்லாமல் போய் விட்டது. என் கணவரிடம் சொல்ல முயற்சித்தேன். அவர் எதையும் காதிலேயே போட்டுக் கொள்ளவில்லை. இது நமது வீடு தானே? உனக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அப்படியே செய் என்று கூறி விட்டார். நான் மிகவும் தனிமையாக உணர்கிறேன். இந்த சூழ்நிலையை நான் எப்படி சமாளிப்பது?

வீட்டையும் வேலையையும் நல்லமுறையில் சமாளிக்க அவரது மனதை பக்குவப்படுத்தஅவருக்குசில வழிமுறைகளை விளக்கினேன். மனதிற்கு சக்தியூட்ட தேவைப்பட்ட சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

அதன் பிறகு அடுத்து இன்னொரு பெண் வந்தார். அவரும் வேலைக்கு செல்பவர். திருமணமாகி ஆறு மாதங்கள் ஆகின்றன. அவரும் மிகவும் அதிருப்தியுடன் இருந்தார். காரணம்? அவரே சொல்கிறார் 'திருமணத்திற்கு முன் நான் கூட்டு குடும்பத்தில் இருந்தேன். எனக்கென்று ஒரு வீடு இருக்க வேண்டும் அதை நானே என் விருப்பம் போல் நிர்வகிக்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் ஆசை. ஆனால் திருமணத்திற்கு பிறகு என் மாமனார் மாமியார் எங்களுடனேயே இருக்கிறார்கள். எல்லாவற்றையும் அவர்களே பார்த்து கொள்கிறார்கள். என் மாமியார் சமையல் முழுக்க அவரே செய்து விடுகிறார். சொல்லப்போனால், நான் அலுவலகம் சென்ற பிறகு எங்களது அறையை பார்வையிட்டு அதை சுத்தப் படுத்தி வைக்கிறார். எனக்கு கோபமாக வருகிறது. அவர்கள் எதற்கு எல்லாம் செய்ய வேண்டும்? பிறகு இந்த வீட்டில் எனக்கு என்ன வேலை இருக்கிறது? எனது கணவரை கேட்ட பொழுது தனது பெற்றோர் மிகவும் அக்கறையுடன் இருப்பதால் நாம் எதைப் பற்றியும் கவலைப் படக்கூடாது என்று நினைக்கிறார்கள். அதனால் நான் அதை அப்படியே விட்டு விட வேண்டும் என்று கூறி விட்டார். அப்படியென்றால் எனது வீட்டில் என் விருப்பம் போல் எல்லாம் செய்ய எனக்கு என்று தான் சுதந்திரம் கிடைக்கும்?

இந்த பெண்ணிற்கு சில ஆலோசனைகள் சொன்னேன். தனக்கும் வீட்டு நிர்வாகத்தில் பங்கு வேண்டும் என்பதை எப்படி நாசுக்காக மாமியாருக்கு புரிய வைப்பது என்று சொன்னேன். அவருக்கு வேண்டிய மாற்றங்களை நிறைவேற்றும் பொழுது கூட மாமியாரின் மனம் புண்படாத வண்ணம் சாமர்த்தியமாக செய்ய வேண்டும் என்பதையும் புரிய வைத்தேன். மேலும் மிகவும் சௌகரியமான ஒரு வாழ்க்கை அமைந்ததற்கு மனதில் நன்றி உணர்வுடன் இருப்பது எவ்வளவு அவசியம் என்பதையும் புரிய வைத்தேன்.அவர் எவ்வளவு அதிருஷ்டசாலி என்பதையும் அவருக்கு புரிய வைத்தேன்.

இந்த இரு பெண்களையும் நினைத்து அன்று சற்று வியந்து போனேன். இருவரது சூழ்நிலையும் நேர் எதிராக இருந்தது. ஆனால் இருவருமே சந்தோஷமாக இல்லை!

யோசித்துப் பார்த்தால் இருவரும் இடம் மாறி இருந்திருக்க வேண்டும். அப்பொழுது எல்லாமே சரியாக இருந்திருக்குமே என்று தோன்றுகிறது. ஆனால் அதையும் நிச்சயமாக சொல்ல முடியாதே? இரண்டாவது பெண்ணின் வாழ்க்கை மிக சௌகரியமானது தான். ஆனால் அவரும் சந்தோஷமாக இல்லையே? ஆக சூழ்நிலையை மட்டும் குறை சொல்ல முடியாது. நாம் அதை பார்க்கும் கண்ணோட்டம், அதை உணரும் விதம், அதை அனுபவிக்கும் விதம் அது தான் வித்தியாசத்தை உருவாக்குகிறது.

அப்படியென்றால் நமது எண்ணங்களை மாற்றிக் கொள்வதன் மூலம் ஒரு சூழ்நிலையை நாம் உணரும் விதத்தை, அதை அனுபவிக்கும் விதத்தை மாற்றி விட முடியுமா? நிச்சயமாக முடியும். ஏதேனும் ஒரு சூழ்நிலை உங்களுக்கு மன வருத்தத்தை அளிப்பதாக இருந்தால் முதலில் தியானம் செய்யுங்கள். அதே சூழ்நிலையை வேறு கோணத்தில் பார்க்க வாய்ப்பிருக்கிறதா என்று பாருங்கள். சந்தோஷப்படும்படி அதில் ஏதேனும் இருக்கிறதா என்று பாருங்கள். அப்படி உங்கள் கண்ணோட்டத்தை மாற்ற முடிந்தால் அந்த சூழ்நிலையின் பரிணாமமே மாறி விடுவதை நீங்கள் உணர்வீர்கள்.

மனம் மிகவும் சக்தி வாய்ந்தது. அது உங்கள் வாழ்க்கையை சிறப்பாக்கும்படி செயல்பட செய்யுங்கள்.

ஆசீர்வாதங்கள்,

ஸ்ரீமாதா

### ஆல்ஃபா மியுசிக் தெரபி!

குருஜி அவர்களால் துவங்கப்பட்ட ஆல்ஃபா மியுசிக் தெரபி மிகவும் சிறப்பான பயனை தருகிறது. நூற்றுக்கணக்கானவர்கள் இதனால் பயனடைந்திருக்கிறார்கள். அவர்கள் விரும்பும் மாற்றத்தை மனதில் உருவாக்கும் இந்த இசை சிகிச்சை. பலர் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்கள் நீங்கிவிட்டன. தற்கொலை எண்ணம் கூட முழுவதுமாக மறைந்துவிட்டது. இந்த இசை சிகிச்சைக்குப் பிறகு மாணவர்களால் நன்றாக படிக்க முடிகிறது. குடிப்பழக்கம் உள்ளவர்கள் அதை முற்றிலும் துறந்திருக்கிறார்கள். இத்தனை மாற்றங்களும் இந்த இசை சிகிச்சை பெறுவதன் மூலம் கிடைத்துவிடுகின்றது!

மேற்கொண்டு விபரங்களுக்கு AMP அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

It was the day of Goddess Amman festival in our village. We would always see the procession  from very close. That particular day the crowd was more and I was also 5 months pregnant. Hence I sent an energy ball and what Miracle! I was able to see the goddess very close.

***Alpha Siddha***




எங்கள் ஊரில் அன்று அம்மன் திருவிழா நடைபெற்றது. நாங்கள் எப்பொழுதும் அம்மன் ஊர்வலமாக வரும்பொழுது அம்மனை மிக அருகிலிருந்து தரிசிப்போம். ஆனால் அன்று அதிக கூட்டம் இருந்ததால் எங்களால் அம்மனை தரிசிக்க முடியவில்லை. மேலும் நான் 5 மாதம் கர்ப்பமாக இருந்ததால். ஆந்த கூட்டதில் என்னால் அம்மனை தரிசிக்க முடியவில்லை. உடனே நான் ஆல்ஃபா தியானத்தில் அம்மனை சிரமமின்றி தரிசிப்பதற்கு சக்தி பந்தை அனுப்பினேன். என்ன ஆச்சர்யம்! அம்மனை மிக அருகிலிருந்து தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. ஆல்ஃபாவிற்கும், குருஜிக்கும் மற்றும் த்ரிபுரசுந்தரிக்கும் நன்றி!

**ஆல்ஃபா சித்தர்**

My Husband had applied for H1 visa to US. Since his name did not come in the first list, he was dejected and was upset. I meditated in Alpha for my husband to get the visa. I had full faith in Goddess Tirupurasundari. The nest Monday we got the information that he was selected. I was very happy. ***Alpha Siddha***

Our life has changed with lot of positive things only because of alpha... I thank my sister who joined me in Alpha... I pray God to give long and healthy life to our Guruji to guide more and more people to Alpha.

***Alpha Siddha***

6 months back my mother misplaced her gold chain... She was very upset. Myself and my sister sent energy ball visualizing that my mother got her chain back. Within 2 days my mother called us and informed that she got her chain that was a real surprise to us.

***Alpha Siddha***

My daughter had secured very low marks in her college exams. As per Guruji's advice she had taken Alpha Music Therapy. Alpha Music therapy  changed my daughter's attitude. She had scored above 94, 96, 92 in all subjects. Above 90 marks is considered really a miracle. Thanks to Guruji! ***Ms. Ahila – Chennai***

My husband is working in the army and he is in Jammu now. I wanted him to get home posting and come to Bangalore and finish his remaining service and settle here. Everyday in my meditations I used to imagine, he got his home posting & he calls me to tell the news of his posting & we are happy& sharing the news with all. I did this for few days regularly. I felt happy  & thanked God and Alpha for his posting. The next day I got a call from my husband  saying he is coming to Bangalore and he got his posting here. He was so shocked and surprised to get the letter from Bangalore for his posting, because he never asked or requested anyone. It came suddenly and all were surprised and happy. I feel so good and happy that my prayers were answered the way I imagined. Now my belief in Alpha is growing more stronger. I thank Alpha and Guruji from my Heart. "Have faith and you will receive". ***Lavanya –Bangalore***

என்னுடைய கணவரின் அலுவலகத்தில் அமெரிக்கா செல்வதற்கான  விசா எடுப்பதற்கு விண்ணப்பித்திருந்தார். முதல் தேர்வில் அவருடைய பெயர் வராததால்,  நமக்கு இது எளிதில் கிடைக்காது என்று நம்பிக்கை இல்லாமல் இருந்தார். நான் ஆல்ஃபா தியானத்தின் மூலம் விசா கிடைப்பதற்காக பிரபஞ்ச சக்திக்கு சக்திப் பந்து அனுப்பினேன். எனக்கு த்ரிபுரசுந்தரியின் மேல் முழு நம்பிக்கை இருந்தது. அடுத்த திங்கட்கிழமை அவர் தேர்வு செய்யப்பட்டார் என்ற செய்தி கிடைத்து மகிழ்ச்சி அடைந்தேன். **ஆல்ஃபா சித்தர்**

எங்களுடைய வாழ்க்கையில் ஆல்ஃபா தியானத்தின் மூலம் பல நல்ல மாற்றங்கள் நிகழ்ந்திருப்பது உண்மை. இந்த ஆல்ஃபா தியானத்தில் என்னை சேர வைத்த என்னுடைய சகோதரிக்கு நன்றி! குருஜி அவர்கள் இன்னும் பல்லாண்டு காலம் ஆரோக்கியமாக வாழந்து இன்னும் பல மக்களை நல்முறையில் வழிகாட்ட இறைவனை வேண்டுகிறோம். **ஆல்ஃபா சித்தர்**

6 மாத்திற்கு முன்பு என்னுடைய தாயின் தங்க சங்கிலி காணாமல் போய்விட்டது. அவர் இதனால் மன வேதனையிலிருந்தார். நானும் என்னுடைய சகோதரியும் ஆல்ஃபா தியானத்தின் மூலம் பிரபஞ்ச சக்திக்கு சக்திப்பந்து அனுப்பினோம். அடுத்த 2 நாட்களிலேயே என்னுடைய தாயிடமிருந்து தங்க சங்கிலி கிடைத்துவிட்டதாக போன் மூலம் செய்தி வந்தது. ஆல்ஃபாவிற்கும், குருஜிக்கும் நன்றி! **ஆல்ஃபா சித்தர்**

என்னுடைய மகள் கல்லூரித் தேர்வில் மிக குறைந்த மதிப்பெண்கள் எடுத்திருந்தாள். குருஜியின் ஆலோசனைப்படி ஆல்ஃபா மியுசிக் தெரபி எடுத்துக்கொண்டாள். என்ன வியப்பு! அடுத்த தேர்வில் அவள் அனைத்து பாடங்களிலும் 94, 96, 92 என்ற மதிப்பெண்கள் எடுத்தாள். 90 மதிப்பெண் என்பது மிக பெரிய ஆச்சர்யம்! குருஜிக்கு மிக்க நன்றி!

**அகிலா– சென்னை**

என் கணவர் ஜம்முவில் ராணுவத்தில் பணியாற்றிவருகிறார். நான் பெங்களூரில் இருக்கிறேன். நான் ஆல்ஃபா தியானத்தின் மூலம் அவருக்கு பெங்களூரிலேயே பணிமாற்றம் கிடைப்பது போலவும், இதை அவரே எனக்கு தொலைபேசி மூலம் இந்த செய்தியை சொல்வது போல் என்னுடைய தினசரி தியானத்தில் பார்த்து வந்தேன். என்ன வியப்பு! அடுத்த நாளே எனது கணவர் எனக்கு இந்த செய்தியை தொலைபேசி மூலம் தெரிவித்தார். அவருக்கு இது மிகப்பெரிய ஆச்சர்யம் என்னவென்றால் இதற்காக அவர் யாரிடமும் சிபாரிசு பெறவில்லை. இது தானாக அவரை தேடிவந்ததாகும். நான் தினசரி நம்பிக்கையுடன் செய்த தியானத்தின் பலன் தான் இது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.  குருஜிக்கும், கடவுளுக்கும், ஆல்ஃபாவிற்கும் நன்றி! **லாவண்யா – பெங்களூரு**

*Guruji's TV programs are telecast in these channels. Don't miss them!*

| | |
|---|---|
| **MAKKAL TV**<br>Saturdays, 9:00 AM | **POTHIGAI TV**<br>Mondays, 1:30 PM |

***Recordings of the programs can be viewed at our website www.alphamindpower.net***

***AMP is on Facebook & WhatsApp! Connect with us to receive latest updates on upcoming events, useful articles, & share alpha experiences with fellow alpha siddhas. Not connected yet? Reach out to us now +917358595493 to get connected***

AMP வாட்ஸ்அப் குரூப்கள் உருவாக்கப் பட்டு வருகின்றன. இதன் மூலம் சுலபமாக நாம் தொடர்பு கொள்ளவும் முக்கியமான செய்திகளை பகிரவும் முடியும். நீங்கள் ஏதேனும் குரூப்பில் இல்லாவிட்டால், உங்கள் மொபைல் நம்பரிலிருந்து +917358595493 என்ற நம்பருக்கு ஒரு வாட்ஸ்அப் செய்தி அனுப்பினால் நீங்கள் வாட்ஸ்அப் குரூப்பில் இணைக்கப்படுவீர்கள்

**Face book link:** https://www.facebook.com/groups/alphamindpower/



## Upcoming classes' schedule

NOTE: Please call & register with AMP office before attending any of the workshops

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Chennai<br>(Tamil) | Level – 2<br>Level – 3<br>Agnikundam<br>Level – 1 | 09/06/16<br>10/06/16<br>11/06/16<br>12/06/16 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar Road, T.Nagar,<br>Chennai |
| Bangalore<br>(English) | Level – 2<br>Level – 3<br>Amrut Siddhi<br>Level – 1 | 23/06/16<br>24/06/16<br>25/06/16<br>26/06/16 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Akshaya Aura, 6, Kalidasa Marg, Gandhi Nagar, Bangalore |
| Madurai<br>(Tamil) | Amrut Siddhi | 03/07/16 | Sun | 9am to 5pm | Hotel Poppys,<br>Near Meenakshi Mission Hospital,<br>Mattuthavani – Airport Ring Road,<br>Madurai |
| Delhi<br>(English) | Level – 1<br>Level – 2<br>Level – 3<br>Psychic Energy | 09/07/16<br>10/07/16<br>11/07/16<br>12/07/16 | Sat<br>Sun<br>Mon<br>Tue | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | The Legend Inn<br>E-4 East of Kailash, 15, Modern Society,<br>Casa Legend, New Delhi-110065 |
| Chennai<br>(Tamil) | Level – 2<br>Level – 3<br>Mantras<br>Level – 1 | 21/07/16<br>22/07/16<br>23/07/16<br>24/07/16 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers,<br>Pondy Bazaar Road, T.Nagar,<br>Chennai |
| Salem<br>(Tamil) | Level – 2<br>Level – 3<br>Amrut Siddhi<br>Level – 1 | 28/07/16<br>29/07/16<br>30/07/16<br>31/07/16 | Thu<br>Fri<br>Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm<br>9am to 5pm | Hotel Grand Estancia, Bangalore Bypass Road, Salem |